...trix

வருஷ சந்தா ரூ ...
வை.மு. கோதைநாயகி அம்மாள்
(Mrs. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

மலர் 11 | 1934 ௵ ஜனவரி ௴ | இதழ் 2

"ஜெயஸஞ்ஜீவி"

வெளிவந்து விட்டது

OFFICE OF THE REGISTRAR OF C...
7-FEB 193...



விலை அணா நான்குதான்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

...தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

...கடைசித் தேதியில் பத்திரிகை வெளியாகும்.

தனிப் பிரதி விலை அணா 2.

JC
ஜ211, N22J4
N34.11.2
152962

முக்கிய அறிவிப்பு

அவசியம் படியுங்கள்

நமது ஆசிரியை திடீரென கடுஞ்சுரத்தினால் படுத்திருப்பதால் இம்மாத சஞ்சிகையை வழக்கமான பக்கங்களுடன் வெளியிட முடியாததற்கு வருந்துகிறோம். தற்போது குறைந்துள்ள பக்கங்களை அடுத்த இதழில் சேர்த்து வெளியிடுகிறோம். இந்த எதிர்பாராத சம்பவத்திற்கு நமது அன்பர்கள் மன்னிக்கக் கோருகிறோம்.

வை. மு. பார்த்தஸாரதி,
காரியஸ்தன்.

பதினொன்றாவதாண்டுக் கொண்டாட்டம்

50 ரூபாய் பரிசுகள்.

1934வரு பிப்ரவரி மாதம் 25-ந் தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல் பரிசு ரூ. 15. 10 ரூபாயில் இரண்டு பரிசுகள்.
5 ரூபாயில் மூன்று பரிசுகள்.

மேற்கண்ட பரிசுகள் புத்தகங்களாகவோ, சுத்தக் கதர் உடைகளாகவோ கொடுக்கப்படும்.

புதிய நாவல் வெளிவந்து விட்டது

ஒரு சந்தா சேர்த்தனுப்புவோருக்கு இனாம்.

பொங்கல் பண்டிகைக்குள், பல சிறு கதைகள் அடங்கிய புத்தகம் ஒன்றை வெளியிடுவதாகச் சென்ற இதழில் தெரிவித்திருந்தோமாயினும், சில எதிர்பாராத காரணங்களால் அது அச்சாகத் தாமதமாவதால் இப்போது "ஜெயஸஞ்ஜீவி" எனும் புதிய துப்பறியும் நாவலை அச்சிட்டு, முன் பணமனுப்பியவர்களுக்கு அனுப்பியுள்ளோம். இதன் விலையும் நான்கணாதான். வேண்டியவர்கள் ஸ்டாம்பாகவோ அல்லது இதர புத்தகங்களின் விலையுடன் சேர்த்தோ அனுப்பவும்.

"ஜகன்மோகினி" காரியாலயம்.
திருவல்லிக்கேணி, சென்னை.

"His Master's Voice"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-FEB 1934

ஸ்ரீ

வள்ளி திருமணம்

என்னும் மிக க்யாதி பெற்ற
நாடகத்தை
ஏழு ரிகார்டுகளடங்கிய ஓர் ஸெட்டில்
ஆச்சர்யமாய் ரிகார்டு செய்து
அழகிய பெட்டியில்
வைத்து
வெளியிட்டிருக்கிறோம்.

விலை ரூ. 19-4

இவைகள் எல்லா "ஹிஸ் மாஸ்டர்ஸ்
வாய்ஸ்'' வியாபாரிகளிடத்திலும்
கிடைக்கும். இதை கேட்டானந்தியுங்கள்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்

182962

பங்கு 1
ரூ. 3-8-0
சாமளநாதன்
சண்பக விஜயம்
கௌரீமுகுந்தன்

நாவல் பிரியர்களுக்கு நல் விருந்து

பங்கு 4
ரூ. 3-4-0
பத்மசுந்தரன்
சாருலோசனா

குறைந்த விலை

நமது “ஜகன்மோகினி” யின் பதினொன்றாவதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, நமது நாவல்களை ஏழ்மை நிலைமையில் விருப்பவர்களும் வாங்கி வாசித்து இன்புற வேண்டுமெனக் கருதி, கீழ்க்கண்ட பங்குகளாகப் பிரித்து விலைகளை மிகவும் குறைத்ததுடன், தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். முன் பணமாகத்தான் அனுப்ப வேண்டும். வி. பி, கிடையாது.

தபாற் செலவு இனாம்

பங்கு 2
ரூ. 3-8-0
வைதேகி
ருக்மிணீகாந்தன்
சுகந்த புஷ்பம்

இந்த அரிய தருணம் மார்ச்சு மாதக்கடைசி வரையில் தான்.

பங்கு 5
ரூ. 3.
ராதாமணி
ஸாரமதி
நளினசேகரன்

மேற்கண்ட பங்குகளாக இல்லாமல் வெவ்வேறு புத்தகங்கள் வேண்டியவர்கள் ஏழரை ரூபாய் பெறுமான புத்தகங்களுக்கு ஐந்து ரூபாய் அனுப்பினால் அவற்றைத் தபாற்செலவின்றி அனுப்புவோம்.

பங்கு 3
ரூ. 3-4-0
நவநீதகிருஷ்ணன்
பரிமள கேசவன்
உத்தம சீலன்
மூன்று வைரங்கள்

“ஜகன்மோகினி” ஆபீஸ்
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி.

பங்கு 6
ரூ. 2-4-0
கதம்பமாலை
சோதனையின் கொடுமை
வீரவஸந்தா

கீழ் குறித்த வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் நாவல்களையும் மற்றும் எமது இதர பிரசுரங்களையும் மிகவும் குறைந்த விலைக்கு தபாற் செலவு இன்றி 1934 பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் ஏப்ரல் மாதம் 30-ந் தேதி வரையில் விற்கத் தீர்மானித்துள்ளோம். முக்கிய அறிவிப்பு: (1) கீழ்க்குறித்த தொகுதிகளைப் பிரித்துக் கொடுக்க முடியாது. (2) எத்தனை தொகுதிகள் தேவையோ அதன் முழுக்கிரயத்தையும் மணி ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும். சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளிநாட்டு நண்பர்கள், ஒவ்வொரு தொகுதிக்கும் அணா 8 சேர்த்து அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

தொகுதி—1.

1. திகம்பரசாமியார் பால்ய லீலை	5	0
2. இராஜேந்திர மோகனா	1	4
	6	4
கமிஷன்	2	12
ஷை 2 நாவல்களின் விலை ரூ.	3	8

தொகுதி—2.

1. சதானந்த போதக சாமியார்	2	4
2. ரமாமணி	2	0
	4	4
கமிஷன்	1	12
ஷை 2 நாவல்களின் விலை ரூ.	2	8

தொகுதி—3.

1. துரைர்க்கண்ணம்மாள்	2	4
2. மிஸிஸ் லீலா மோகினி	3	0
	5	4
கமிஷன்	2	4
ஷை 2 நாவல்களின் விலை ரூ.	3	0

தொகுதி—4.

1. பன்னியூர் படாடோப சர்மா	2	4
2. மன்மதபுரி மூடுமந்திரம்	2	12
	5	0
கமிஷன்	2	0
ஷை 2 நாவல்களின் விலை ரூ	3	0

தொகுதி—5.

1. மன்மத விஜயம்	0	4
2. சண்முக வடிவு	0	4
3. சந்திர மீனன்	2	0
	2	8
கமிஷன்	1	0
ஷை 3 நாவல்களின் விலை ரூ.	1	8

தொகுதி—6.

1. தில்லை நாயகி	2	4
2. சரோஜனி	2	0
3. வீரகேசரி	1	12
	6	0
கமிஷன்	2	0
ஷை 3 நாவல்களின் விலை ரூ.	4	0

சங்கீதத் தொகுதி—1.

1. ஸங்கீத சிந்தாமணி	3	0
2. திராவிடகானம்	3	0
3. ஸங்கீத சில்லரைக் கோர்வை	3	0
4. கீர்த்தன ரத்னங்கள்	1	4
	10	4
கமிஷன்	4	4
ஷை 4 சங்கீத புத்தகங்களும்	6	0

எம். எஸ். ராமுலு கம்பெனி,

எஸ்பிளனேட்,
மதராஸ்.

பிரதாப விகடன்

ஒரு மாதாந்திரப் பத்திரிகை.

சிறு கதைகள், வேடிக்கை, விநோதம் நிறைந்த பல பக்கங்களுள்ளது. தனிப் பிரதி அணு இரண்டு. வருடச் சந்தா ரூபாய் ஒன்று. வெளி நாடுகளுக்கு இரட்டத்தனை. எல்லா பத்திரிகைகள் விற்போர்களிடமும், ஹிக்கின்பாதம்ஸ் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏஜெண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

"பிரதாப விகடன்" ஆபீஸ்
தபால் பெட்டி 23.
மதராஸ்.

உங்களுக்கு எந்த நாவல் இனாமாக வேண்டும்?

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்கள் நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் தபாற்செலவின்றி அனுப்புகிறோம்.

				பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பணமனுப்புகிறவர்களுக்கு			இன்ப மனோகரி
(2)	2 புதிய சந்தாதாரர்களை		,,	நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா
(3)	3	,,	,,	கோபாலரத்னம்
(4)	4	,,	,,	கதம்பமாலை அல்லது சுகந்தபுஷ்பம்
(5)	5	,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி
(6)	6	,,	,,	சண்பகவிஜயம்
(7)	7	,,		சாமளநாதன் அல்லது ருக்மிணீகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன்
(8)	8	,,	,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனை அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன்

3-வது அதிகாரம்

அன்றில் பக்ஷிகள்—அதிசயக் கொள்ளை

கொள்ளைக் கூட்டத்தினரின் கடிதம் என்றதும் சர்வோத்தமரைவிட ரங்கமணிக்கு உண்டாகிய குலை நடுக்கத்திற்கு அளவே இல்லை. அவ்வம்மையின் பயம் முற்றும் தன் கணவனின் உயிர் பாதுகாப்பிலேயே இருந்தது. என்ன செய்வாள் பாவம்! தன் நாயகனிடம் வந்து "நாதா! இதென்ன அநியாயம்! யார் இக் கடிதத்தை எழுதி யிருப்பார்கள்? உண்மையிலேயே கொள்ளைக் கூட்டமாக விருக்குமா! அன்றி நமது சத்துருக்கள் யாரேனும் இவ்விதம் செய்திருப்பார்களா? இதை நாம் எவ்வாறு நம்புவது?" என்று நடுங்கியவாறு கேட்டாள்.

சர்வோ:—ரங்கமணீ! நீ எத்தனை தான் படித்தும், விஷயங்களை யறிந்தும் பேதைத்தனத்தைக் காட்டி விடுகிறாயே! திடீரென்று மொட்டைக் கடிதமாக வந்திருக்கும் இதை யார் எப்படித்தான் நம்பு வது, நினைப்பது? எதற்கும் நாம் பயந்து ஆகப் போவது ஏதே னும் உண்டா! எல்லாவற்றையும் சர்வேசன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு நாம் அவனைப் பஜித்தால் அவன் காரியத்தை நடத் திக் கொண்டு போகிறான்.

ரங்க:—நாதா! அவைகளை எல்லாம் எத்தனை உறுதியாகக் கொண்டாலும் துஷ்டர்கள் வருகிறார்கள் என்பதைக் கேட்டதும் பறந்து விடுகிறதே! அவர்கள் வந்து நம்மை இம்சித்தால் என்ன

முகத்தைப் பலவிதமாக ஆட்டிக் கோண வைத்துக்கொண்டு நடந் தால் அது ஒரு ஷோக்கு என்று சிலர் நினைக்கிறார்கள். அந்த கோராமை யைப் பார்த்துப் பிறர் பரிகஸிப்பதை யவர்கள் ஏன் அறிவதில்லையோ தெரியவில்லை.

செய்வது? தீவட்டியால் அடித்தும், சுட்டும், வீட்டைக் கொளுத்தி யும் வதை செய்தால் என்ன செய்வது? தங்கள் பிராணனுக்கு யாதொரு பயமும் இல்லாதிருந்தால் போதுமே! அதுதான் நான் வேண்டுவது.

சர்வோ:—மணீ! பிராணனுவது, பயமாவது? போகும் பிரா ணனை நிறுத்திக் காப்பது உன் கையிலிருக்கிறதா! அன்றி கொண்டு போவது அக் கொள்ளைக் கூட்டத்தினரிட மிருக்கிறதா! இதென்ன பைத்தியக்காரத்தனம்! நம் தலை விதி எவ்விதமிருக்கிறதோ அப்ப டித்தான் யாவும் நடக்கும். வீணுக பயப்படாதே! கடவுளைத் தியா னம் செய்.

ரங்க:—பிராண நாதா! தாங்கள் சொல்கிறபடி நம்பிக்கை யிருந்தும் மனிதப் பிரயத்தனமும் சற்று வேண்டாமா! நீங்கள் இக் கடிதத்தைப் போலீஸுக்குக் காட்டி அவர்களது உதவியைக் கேளுங் களேன்; இல்லையேல் வீட்டை விட்டு நாம் எங்கேனும் வெளியில் சென்று விடலாமே!...

சர்வோ:—சீச்சீ! என்ன கோழைத்தனமாகப் பேசுகிறுய்! என்னதான் நடக்கிறதென்று நான் துணிந்துதான் பார்க்கப் போகி றேன். அப்படி உனக்குப் பயமாக விருந்தால் நீ வேண்டுமாயின் எங் கேனும் சென்று வா; நான் வரமாட்டேன்; இது உறுதிதான். இன்று போலீஸாரைக் கொண்டு தடுக்க முடியும் என்று எண்ணுகி றுய்! நமக்குத் தெரிவிக்காமலேயே ஒரு தினம் வந்து விட்டால் என்ன செய்வாய்! இதெல்லாம் என் மனத்திற்குச் சரிப்படாது. இதைப் பற்றி இனி பன்ன பன்னவென்று பேசாதே!'' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். இதற்குமேல் என்ன செய்வாள் பாவம்! கடவுளை வேண்டிக்கொண்டு தன் கணவனின் காலடியிலேயே கிடப்பதென்று முடிவு கட்டிக் கொண்டாள்.

எதிர்பாராத ஒரு சந்தோஷ காரியம் நடைபெறுவதில் தனித்த ஆநந்த மிருக்கிறது. கோடித்துக் கோடித்து ஒரு சிநேகிதரைச் சந்திப் பதைவிட திடீரென்று ப்ரியம் நிறைந்த மனத்துடன் சிநேகிதரைச் சந்

னங்களைப் பாடி முறையிட்டார். எம்பெருமான் சொப்பனத்தில் தாமிருக்குமிடம் தெரிவித்த பிறகு ஐயரவாள் பரம சந்தோஷத்துடன் விக்ரக மூர்த்திகளைத் தேடிக் கொணர்ந்து அச்சமயத்தில் பல கீர்த்தனங்களைப் பாடினார்; ஆநந்தக் கூத்தாடினார்.

நிற்க, தியாகராஜ சுவாமிகள் யாத்ரா மார்க்கமாகத் தம் சிஷ்ய கோஷ்டியுடன் கிளம்பினார். அனேக திவ்ய ஸ்தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு வருகையில் ஒரு ஊரில் கூட்டம் அதிகமாக நிற்பதைக் கண்டு தம் சிஷ்யர்களை விட்டு விசாரித்து வரச் செய்தார்.

"இவ்வூரில் தினம் அஸ்தமித்தால் புலி பயம் அதிகமாம்! அதனால் அஸ்தமித்ததும் ஒருவரும் வீட்டுக் கதவையே திறக்க மாட்டார்களாம். இதை யறியாத யாத்ரை செய்யும் ஒரு குடும்பத்தினர் அவ்வூருக்கு அஸ்தமனத்திற்கு வந்தார்களாம். அங்கு யாரும் கதவைத் திறந்து தங்குவதற்கு இடம் கொடாமையால் மனைவியையும் மக்களையும் வெளியே நிற்கச் செய்து தலைவர் கோயிலின் மதிலேறிக் குதித்து கோயில் கதவைத் திறக்க ஏற்பாடு செய்வதாகக் கூறி, மதிலேறிக் குதித்தாராம். அவர் கோயில் கதவையும் திறக்கவில்லை; பிறகு சந்தடியே இல்லையாம்.

மக்களும், மனைவியும் அலறித் தவித்தார்களாம். காலையில் சென்று பார்க்க அம்மனிதர் குதித்த விடத்தில் கீழே கிணறு இருந்ததால் அதில் விழுந்து இறந்துவிட்டாராம்! அவர் மனைவியும், மக்களும் புலம்புகிறார்கள்" என்று சீடன் கூறினன்.

இதைக் கேட்ட சுவாமிகள் வேகமாகத் தாமே அவ்விடம் சென்று கடவுளை வேண்டி அனேக கீர்த்தனங்களைப் பாடி "இந்த மனிதனுக்கு ஜீவனைத் தந்தருளவேண்டும், பதிலுக்கு என் ஜீவனை

சிநேகிதத்தின் மேன்மையையும்—அதன் தனித்த ருசிகரத்தையும்—அறிந்தோர் சிநேகிதர்களுடன் பழகுவதை ஓர் சொர்க்க போகமாகவே நினைப்பார்கள். அந்த மகிமை யறியாதவர்களுக்கு வேடிக்கையாக விருக்கிறது.

அங்கீகரித்துக் கொள்ளும்' 'என்று வேண்டியது, இறந்த மனிதன் தூங்கி எழுந்திருப்பதுபோல எழுந்தான். அந்த அற்புதமான காட்சியைக் கண்டு ஜனங்களெல்லாம் தியாகராஜரைத் தெய்வமென்றே வணங்கி பூஜித்துப் பூரித்தார்கள். என்ன தியாக புத்தி பார்த்தாயா! ரங்கமணீ! இதைத்தான் முக்கியமாகக் கூற வந்தேன்.

சுவாமிகள் கோவூர் என்ற ஊருக்குச் சென்று ஓர் தனிகர் வீட்டில் இறங்கி இருந்தார். அவர் திரும்பும்போது அந்த தனிகர் ஒரு பணப் பையைச் சுவாமிகளுக்குக் கொடுத்தார்! சுவாமிகள் அதை மறுத்துவிட்டார்: ஆதலால் அந்த தனிகர் சுவாமிகளுக்குத் தெரியாமல் பணப்பையை அவர் உட்காரும் பல்லக்கில் வைத்து விட்டார்! இதைப் பல்லக்கு தூக்குபவர்கள் மட்டும் அறிவார்கள்; அறிந்தும் ஒன்றும் பேசாதிருந்துவிட்டார்கள்!

சுவாமிகள் காட்டு மார்க்கமாகச் செல்கையில், நடுக்காட்டில் திருடர்கள் பல்லக்கைக் கண்டு சிறிது தூரத்திலிருந்து கல்லைப் போட்டார்களாம்! ரங்கமணீ! சுவாமி பரம பக்தரென்று திருடர்கள் அவரை விட்டார்களா! சுவாமி அதைக் கண்டு பயந்தாரா! இல்லை. திருடரை வேலையாட்கள் கண்டவுடன் நடுங்கிப்போய் "சுவாமி! திருடர்கள் வந்திருக்கிறார்கள்" என்று பயந்தவாறு, பல்லக்கை நிறுத்திவிட்டுக் கூறினார்கள்.

இதைக் கேட்ட சுவாமிகள் "அப்பா! திருடர்கள் வந்தால் நமக்கென்ன பயம்! மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்! அதில்லாத நமக்குப் பயமென்ன! ஸ்ரீராமசந்திரனிருக்கையில் பயமென்ன? செல்லுங்கள்" என்றார். அதைக் கேட்ட வேலைக்காரர்கள் தனிகர் பணப் பையை வைத்த விஷயத்தைக் கூறினார்கள். இச் செய்தி யறிந்த சுவாமிகள் "ஆகா! கள்ளத்தனமாய் நீங்கள் அதை வாங்கி வைத்தீர்களா! ஐயோ! ராமசந்திரா! இந்த அறிவற்ற செய்

புருஷன் ரஸிகயிருக்கையில் மனைவி மண்டுவாக நேருகிறார். மனைவி நல்ல புத்திசாலியாய் சந்தோஷமாக விருக்க நினைத்தால் புருஷன் கடுகன் பூனையாக நேருகிறான். நாகரிகம் மிஞ்சிய இக் காலத்திலும் இம் மாதிரி ஜதைகள் அமைகின்றன.

கையின் பலனுகத்தான் கள்வரைக் காட்டினுயா! என்று வருந்தி "அடேய் அக்கள்வர்கள் இங்கு வரட்டும்! நீங்கள் செல்லவேண்டாம்" என்ருர். வேலைக்காரர்கள் நடுங்கிப்போய் அப்படியே நின்று விட்டார்கள். 'ஹோ கடவுளே!'' என்று ராம பஜனை செய்யத் தொடங்கினுர்கள்.

பின்னும் சற்று நேரத்திற் கெல்லாம் திருடர்கள் அலறிக் கொண்டு சுவாமிகளின் முன்பு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் சுவாமிகள் " அப்பா ! கள்வர்களே ! வாருங்கள்! வாருங்கள்! இதோ இந்த பணப் பையை எடுத்துக் கொள்ளுங்கள்." என்று கூறிப் பையை நீட்டினுர்:

வந்த கள்வர்களோ "சுவாமி! இதிருக்கட்டும். இப்போது உமது பல்லக்கின் இரு பக்கங்களிலும் வெகு ஒய்யாரமாய்—சுந்தர மூர்த்திகளாய், டாலி, டவாலி யணிந்த வீரர்களாய், ஜாஜ்வல்ய மான தேஜஸ் பெற்றவர்களாய் நின்று—எங்கள்மீது அம்புகளை எவிய வீரர்கள் எங்கே? உமது அந்த ஆட்கள் எங்கே! நாங்கள் அவர்களைக் கண்டு கட்டி யணைந்து சரணம் பணிய வேண்டும். இந்த பணம் வேண்டாம்; அவர்களெங்கே! எங்கே?'' என்று சுற்று முற்றும் பார்த்துத் தவிக்கிருர்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே தியாகராஜ சுவாமிகள் " ஹா ! என்னப்பனே ! ராமசந்திரமூர்த்தி! கருணுசாகரா! உன்னைத் தரிசிக்கவேண்டித் தவம் செய்யும் பாவிக்குத் தரிசனம் கொடுக்காமல் அந்த சோரர்களுக்கு உன் திவ்ய தேஜோன்மய தரிசனத்தை அளித்தாயே! அவர்கள் செய்த பாக்கியமே பாக்கியம்.'' என்று கண்ணீர் பெருக,தேகம் மயிர் சிலிர்க்க,பக்தியால் மெய்ம் மறந்து,"பக்கல நிலபடி;. . முந்து வெனுக. இரு பக்கலதோ டனு'' என்பது போன்ற பல கீர்த்தனங்களைப் பாடிப் பரவசமானுர்; திருடர்கள்

இன்று கட்டாயம் ஒருவரைச் சந்திப்பதாகக் கூறிவிட,அன்று வேறு முக்கிய காரியமாக வேறு இடத்திற்குச் செல்ல, அந்த விடத்திற்கு முன்னர் சந்திக்கத் தவறிய மனிதர்கள் வந்திருக்க ஆச்சரியத்துடன் எல்லாக் காரியமும் நடந்து விடுகிறது.

சுவாமிகளின் மகிமையை அறிந்து, பூரித்து நற் ஞான உதயமாகித் தாமும் சுவாமிகளின் சிஷ்யர்களாகச் சேர்ந்து சுவாமிகளுடனேயே காலத்தைக் கடத்தினார்கள்.

ரங்கமணி! ராம பஜனையின் மகிமையைப் பார்த்தாயா! தியாகப் பிரம்மத்தின் சரித்திரத்தில் இது ஓர் முக்கியமான சம்பவம். சுவாமிகள் இன்னும் அனேக கீர்த்தனங்களை அம்ருத தாரையைப் போலச் செய்து பகவானைத் தோத்திரம் செய்த பிரஸாதம்தான் தற்போது உலகில் அபாரமாய் வழங்கி வருகிறது. அனேகருடைய ஜீவனத்திற்கு மூலாதாரமாக விருக்கிறது. அம் மகானை யறியாதோர் மண்ணுலகிலில்லை. ஒவ்வொரு வருடமும் அப் புனித மூர்த்திக்கு பஞ்நத க்ஷேத்திரத்தில் பகுள பஞ்சமியன்று வெகு சிறப்பாக பக்த கோஷ்டிகளால் உத்ஸவம் நடைபெறுகிறது. அவ்விடத்தில் மட்டுமில்லாமல் பல இடங்களிலும் சங்கீதப் பிரியர்கள் அம் மகானுக்கு உத்ஸவம் செய்கிறார்கள். சங்கீதத்தின் மகிமையையே உலகத்தில் அந்த த்யாகமூர்த்திதான் நிலை நாட்டினார். அவரைப் பின்பற்றியே பிறகு அனேக பாகவதர்கள் சங்கீதம் பாடவும் சாஹித்யம் செய்யவும் ஆரம்பித்தார்கள். அந்த தியாகப் பிரம்மத்தின் வாக்கிலிருந்து வந்துள்ள அம்ருத தாரை போன்ற கீர்த்தனங்களுக்கு நிகர் அவைதான் என்று சொல்லலாம். நல்ல அறிவாளிகளாகிய வித்வான்கள் ஒரு கீர்த்தனத்தைக் கேட்ட உடனே "ஆஹா! இது த்யாகப் பிரம்மத்தின் வாக்கிலிருந்து வந்த அம்ருதமல்லவா" என்று அதன் நளினமான அழகைக் கண்ட உடன்—கீர்த்தனையின் பாணியைக் கண்ட உடன்—எளிதில் கூறிவிடுவார்கள்; அத்தகைய தனித்த மதிப்பு பெற்றது அம் மகானின் கீர்த்தனங்கள்.

ரங்கமணி! அத்தகைய த்யாகப் பிரம்மமும் முதலில் பிறக்கும் போது நம்மைப் போன்ற மனிதராகத் தானே பிறந்தார். பிறகு ராம தாரக நாமத்தின் மகிமையினால் இறந்த மனிதனுக்கு ஜீவன்

ஒரு உறவினரின் கல்யாண விசேஷத்திற்காகச் சென்றவிடத்தில், வேறொரு முக்கியமான காரியத்தை உத்தேசித்து, உடனே திரும்பி வர விடை பெற்று, வரும் வழியில் ஒரு சிநேகிதரின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் அங்கு நின்றுவிட நேர்ந்துவிடின், அதை யறிந்த உறவினர்

உண்டாகச் செய்தார். கள்வர்களேயும் தனக்கே வணங்கும்படியாகச் செய்தார். இன்னும் அனேக அற்புதங்களேச் செய்து பகவானேயே நேரில் கண்டாநந்தித்தார்.

இந்த கதையை உனக்கு எதற்குச் சொன்னேனென்ருல், கள்வர் பயத்திற்கு அஞ்சாதே! ராம தாரக மந்திரத்தை மனப் பூர்வமான நம்பிக்கையோடு பஜிக்கப் பழகிக் கொள்ளு. அவனிருக்கையில் மற்ற துணேயும், பாதுகாப்பும் எதற்கு? அப்படி பாது காப்பு வேண்டுமாயின் அவனே அதற்கான ஏற்பாட்டைச் செய்து நமக்குப் புத்தியையும் கொடுப்பான், என்கிற உத்தமமான எண்ணத்துடன் பஜனே செய்யும் பொருட்டே கூறினேன்; அந்த த்யாகராஜரின் கீர்த்தனங்களேயே பாடி அவன் பாதத்திற்கு அர்ப்பணம் செய்துவிடு.'' என்ருர்.

ரங்க:—நாதா! தியாகராஜருடைய மகிமை அத்தகையதா! ஆகா! என்ன பக்தி! என்ன த்யானம்! தேகம் சிலிர்த்து மயிர்க் கூச்செறிகிறதே!...என்று பேசிக் கொண்டிருக்கையில் பெரிய தீவற்றியின் வெளிச்சம் தெரிந்தது.

உடனே ரங்கமணி இயற்கையான அக்ஞானப் பாசி மூடப்பட்டு திடுக்கிட்டாள். அடுத்த க்ஷணம் இந்நேரம் கணவன் கூறிய பொன் மொழிகளே எண்ணிஞள். தன் பீதியைக் காட்டிக் கொள்ளாமல் "ப்ரோசேவா ரேவரே! ரகுபதே!'' என்ற கீர்த்தனமும் "ராரா மாயிண்டி தாக'' "ஏமி நேரமு. நன்னு ப்ரோவ'' என்றது போன்ற கீர்த்தனங்களேப் பாடுகிருள். ராமா! ராமா! என்று மனத்தில் முறையிடுகிருள். இதற்குள் கள்வர்கள் தீவற்றி காட்டும் வெளிச்சமும், பேச்சரவமும் சர்வோத்தமரின் கண்ணிலும் காதிலும் பட்டன.

உடனே அவர் ரங்கமணியின் முகத்தைப் பார்த்தார். அவளுடைய கலக்கம் சிறிது முகத்தில் தெரியாமலில்லே; எனினும்

ஏதோ சாக்கு சொல்லி விட்டு முன்னதாகவே போய்விட்டதாக நினேக்க இடமுண்டாகின்றது. இப்படியே பல விஷயங்களில் உண்மைக்கு நேர் மாருகத் தோற்றங்களுண்டாகின்றன.

தைரியமாயிருப்பதை யறிந்தார்; கடவுளின் சன்னிதானத்தில் இருவரும் வந்து அமர்ந்து "ரகுபதி ராகவ ராஜா ராம்! பதீத பாவன சீதா ராம்!" என்ற நாமாவளியைப் பாடி, பஜனை செய்யத் தொடங்கினார்கள்.

இவர்களுடைய பங்களா ஓர் ஒதுக்குப்புறமானதால் அக்கம் பக்கத்தில் அரை மயிலுக்குள் வேறு பங்களா கிடையாது. இந்த பங்களாவின் தோட்டமே அத்தனை விஸ்தீரணமாயிருக்கிறதால் பக்கத்தில் ஒன்றும் கிடையாது. இவர்களிருவரும் ராம சன்னிதியில் பஜனை செய்துகொண்டிருக்கையில் 5-6-திருடர்கள் கையிலுள்ள தீவற்றியுடன் இவர்களெதிரில் வந்தார்கள். "ரங்கமணி! நடுங்காதே" என்று ஸர்வோத்தமர் ரகஸியமாய் ஜாடை காட்டினார்.

வந்த கள்வர்கள் "எங்கே இரும்புப் பெட்டி சாவி! உம்! நேரம் செய்தால் கொளுத்தி விடுவோம்!" என்று பயங்கரமான தொனியுடன் கேட்டார்கள். ரகுபதி ராகவ ராஜாராம் பாடியபடியே இருந்த சர்வோத்தமர் இதைக் கவனிக்காமலிருந்தார். உடனே கள்வர்கள் "அடேய்! இந்த பாட்டினால் எங்களை மயக்கும் வேஷ புத்தியுடையவன்தான் போலீஸ் பாராவை வீதியில் வைத்துவிட்டாயோ! எங்களுடைய இந்த தீவற்றிக்கு முன்பு போலீஸ் என்ன செய்ய முடியும்! இதை யறியாது முட்டாள் தனம் செய்தாயே! எங்கே!...உம்! எடுத்து வை"...என்றார்கள்.

போலீஸ் என்றதும் சர்வோத்தமருக்கு வியப்புண்டாகிவிட்டது. ஐயோ! நாம் ஒரு போலீஸுக்கும் தெரிவிக்கவில்லையே! எப்படி போலீஸார் வந்திருக்கிறார்கள்! என்று ஆச்சரியப்பட்டார். "ஐயா! இதோ எழுந்தருளி இருக்கும் பெரிய காப்பாளியைவிட வேறு காப்பாளியை நான் எதிர் பார்க்கவில்லை. உங்களுக்கு எது வேண்டுமாயினும் தாராளமாக எடுத்துக்கொண்டு போங்கள்! இவை

ஒரு காரியத்தைச் செய்யுமுன்பு சிலர் அடிக்கடி வந்து, தொந்தரவு செய்து வெகு சுலபத்தில் சீக்கிரமாக முடித்துக்கொள்கிறார்கள். அப்புறம் எட்டிப் பார்ப்பது மில்லை; பார்த்தாலும் பார்க்காதது போலச் செல்கிறார்கள். ஆனால் சில காலம் கழிந்த பின்னர் அவர்களுடைய உதவி

களுக்காகத்தானே நீங்கள் கொள்ளை யிடுவதாக வந்தீர்கள்! இவற்றைக் கொள்ளை யிடாமலேயே என்னிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டிருக்கலாம்.'' என்று வெகு வினயமாகக் கூறியவாறு "ரங்கமணி! உன் உடம்பிலிருக்கும் நகைகளைக் கழட்டி வைத்து விடு'' என்றார்.

கள்வர்கள் சில நிமிடத்திற்குள் வீடு முற்றும் கொள்ளையிட்டு பொருள்களை மூட்டை கட்டிவிட்டார்கள்! கடைசியாக வெள்ளியில் உள்ள விக்ரகத்தையும் உடனே கொடுக்கும்படியாகக் கேட்டார்கள். உத்தமருக்கு அது மட்டும் தன்னுயிரையே கேட்பது போலத் தோன்றிவிட்டது. நண்பர்களே! என்னிடமுள்ள சகலத்தையும் நானளித்துவிடுவேன்! என்னுயிரினுமினிய இந்த விக்ரகத்தையும் படங்களையும் மட்டும் நான் தரமாட்டேன். என்னுடைய உயிர் அவைதான்!'' என்று அவர்கள் காலில் விழுந்து வணங்கிக் கேட்டார்.

கள்வர் தீவற்றிக் காம்பினால் அவர்களை அடித்துத் தள்ளிவிட்டு அங்குள்ள படங்கள், விக்ரகங்கள் எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டு ஓட்டமாக மறைந்தார்கள்! சர்வோத்தமரையும் ரங்கமணியையும் அடித்துத் தள்ளிய உடனே அவர்கள் மன அதிர்ச்சி யுண்டாகி மயக்கமடைந்து விழுந்துவிட்டார்கள்.

காலையிலேயே கொள்ளைக் கூட்டத்தினரின் கடிதம் வந்ததும் அதைப்பற்றி கணவன் மனைவிக்குள் நடந்த வாக்குவாதம் முதலியவற்றை அவர்களின் சமையல்காரன் எப்படியோ தெரிந்துகொண்டு அவர்களறியாதவாறு போலீஸாருக்குத் தெரிவித்து வீதியிலும் தோட்டத்திலும் சில வீரர்களை நிற்கச் செய்திருந்தான்: கொள்ளைக் கூட்டத்தினர் வந்த உடனே அவர்களைச் சுட்டுவிடுவதென்று தோட்டக்காரர்களும் தயாராக நின்றிருந்தார்கள்.

வேண்டி யிருப்பின் வெகு அவசர அவசரமாக [illegible], அதற்கு முன் பார்க்காததற்கு ஏதோ சாக்கு சொல்லித் தீர்க்கவேண்டிய காரியத்தைத் தெரிவிக்கிறார்கள். ஏமாந்த சோணகிரிகள் அதையும் உண்மையென்று நம்பிவிடுகிறார்கள்.

182962
[illegible] -600 008

கொள்ளைக் கூட்டத்தினர் வந்ததும் சமையல்காரனையும்;மற்ற வர்களையும் கட்டிப்போட்டு விட்டார்கள்: இத்தனை நேரம் போலீஸ் வீரர்களாக நின்றவர்கள் சமையல்காரனை நோக்கி, "அட பயித்தியமே! ஏமார்ந்தாயா? போலீஸார் போல உடையுடன் வந்தவர்களும் கொள்ளைக் கூட்டத்தினரும் ஒன்றேதான் என்பதைத் தெரிந்து கொள்ளு: நீ வேறு ஏற்பாடு செய்யாதிருக்கும் பொருட்டு நாங்களே போலீஸ் போல உன் வீட்டு வாயலில் வந்து நிற்கவும், நீ எங்களேயே உதவிக்கு வேண்டவும் சரியாகிவிட்டது. போடா! போ" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றுவிட்டார்கள்.

கட்டப்பட்டுத் தள்ளி இருக்கும் சமையல்காரன் "ஹா! மோசம்! மோசம்!" என்று அலறி யடித்துக்கொள்கிறான்: இப்படியே மற்ற வேலையாட்களையும் மூலைக்கு மூலை கட்டிப் போட்டு இருக்கிறது. காலையில் வெளியிலிருந்து வரும் வேலைக்காரர்கள் வந்து இங்குள்ள அலங்கோலத்தைக் கண்டு "ஹா! இதென்ன அக்ரமம்! என்று நடுங்கி எஜமானரிருப்பிடம் சென்று பார்க்கையில் இருவரும் ஸ்மரணையே யற்று சவம்போலக் கிடந்ததைக் கண்டு திடுக்கிட்டுக் கல்லாய் நின்றுவிட்டார்கள்.

(குறிப்பு—கொள்ளைக் கூட்டத்தினருக்கு மனமொப்பி பொருளைக் கொடுப்பது இக் காலத்தில் உண்டா என்று வாசகர்கள் ஐயுறலாம்: கொள்ளையிலும், கொலையிலும் கைதேர்ந்த கைதிகளிடம் பழகி, இதுபோன்ற அனேக ஆச்சரியகரமான காரியங்களைத் தாங்களே செய்த அனுபவத்தை அவர்கள் வாய்மூலமாகக் கேட்டபின் வியப்பே தோன்றுது.)

புத்தகங்களை வாங்கும்போது "நான் வேறு காரியமாக வந்ததால் கையில் பணம் கொண்டுவரவில்லை; பிறகு அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிற்கு அதைப்பற்றிப் பேசுவதே யில்லை. அப்படி

4-வது அதிகாரம்

திடீக்கிடும் விபத்து—அடங்காப் பிடாரி

காலை எட்டு மணிக்கு ஸ்ரீமணி வெளியில் சென்றதும் அவள் பிதா மகள் வரும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். தாயற்ற குழந்தைகள் எல்லாம் ஸ்ரீமணியையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தன—மணி 9...... 10......11......ஆய்விட்டது. இன்னும் வராமையினல் பசி, பசி, என்று பறக்க வாரம்பித்தன. அவர்களுக்குள் பெரியவளான ஜெயமணி என்னும் பெண்ணே மற்ற குழந்தைகளுக்குச் சாப்பாடு போடப் புறப்பட்டாள்.

சமையலைப் பொருத்த சகல காரியங்களையும் ஸ்ரீமணியே செய்து வந்ததால் இவளுக்கு அவ்வகையில் ஒன்றுமே தெரியாது. குழந்தைகளினுடைய பசியின் கோரானமையைக் கண்டு சகிக்கமாட்டாமல் சாதம் போட வந்தாள். குழம்பு பாத்திரத்தை எடுத்த உடன் அதன் சூடும் கனமும் தாங்காமல் காலில் போட்டுக் கொண்டுவிட்டாள். இந்தஉபத்திரவத்தினல் அந்தப் பெண்ணும் கதற வாரம்பித்தது. கதிர்வேலுக்கு அன்று ஜுரமாதலால் படுத்து அவஸ்தைப் படுகிருர்.

அந்த நிலைமையுடன் மெல்ல எழுந்து வந்து இந்த குழந்தைகளுக்கெல்லாம் சாப்பாட்டைப் போட்டு ஜெயமணிக்குக் காலில் கட்டு கட்டி சிகிச்சை செய்தார். ஸ்ரீமணி இன்றே வேலையி லமர்ந்து வேலையைச் செய்துவிட்டு வருகிருளோ வென்று எண்ணினர். அதற்கும் நேரமாகி விட்டது. மணி ஏறிக்கொண்டே செல்கிறது. கிழவ-

---

நாமாக ஏதாவது வார்த்தை யெடுப்பினும், அதை மாற்றி வேறு விஷயங்களைப்பற்றிப் பேசுகிருர்கள். இனமாக அடித்துக்கொண்டு போவதற்காக இந்த யுக்தி போதும்.

ரின் வயிற்றில் நெருப்புபோல பகீர் பகீர் என்கிறது. என்ன செய்வார் பாவம்! ஜுரமும் நிமிடத்திற்கு நிமிடம் வேகமாக ஏறுகிறது. எழுந்திருக்கவும் முடியவில்லை. எப்படி ஸ்ரீமணியின் இருப்பிடத்தையறிவார்?

குழந்தைகளோ கீச்சு மூச்சென்று கதறுகின்றன. "அம்மா எங்கே! அம்மா எங்கே!" என்று சுற்றுகின்றன. கிழவரால் பதில் கூறவும் சாத்யமற்ற ஜுர வேகம் உண்டாகிவிட்டது. மணியோ மாலையை எட்டிவிட்டது. ஐந்தும் அடித்துவிட்டது. வீட்டிலுள்ள அலங்கோலத்திற்குக் கேட்கவேண்டுமா! ஒன்றோடொன்று சண்டை இடுவதும் அடித்துக்கொள்வதும் அதனால் அழுவதும் கிழவருக்குப் பெரிய தலை நோயாகிவிட்டது. அவருடைய தேக நிலைமையின் பாதையினால் ஆத்திரமுற்றுக் குழந்தைகளை அடித்து மிரட்டி ஒரு பக்கம் இழுத்துத் தள்ளிவிட்டார்.

இச் செய்கையினால் அழுகை பின்னும் பலத்து வீட்டிலிருப்போருக்கும் பெரும் வேதனையாகி விட்டது. அவர்களெல்லாம் சிள்ளு பிள்ளென்று கிழவர்மீது எறிந்து விழுந்தார்கள். இத்தனை அலங்கோலமாகி விட்டது வீடு. கிழவருக்கு அடியோடு எழுந்திருக்க முடியவில்லை; எனினும் "ஸ்ரீமணியை இனியும் தேடாதிருப்பது உசிதமல்ல. வேலைக்காகப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்ற விடத்தில் இத்தனை நேரம் தங்குவதற்குக் காரணமே இல்லை. இதென்னமோ தெரியவில்லை" என்று கிழவருக்கு வருத்தம் அதிகரித்து விட்டது.

இதற்குள் ஸ்ரீமணி எங்கே காணவில்லை. எங்கே சென்றாள் என்கிற பெருங் கேள்வி முற்றும் பரவிவிட்டது. குழந்தைகளை எல்லாம் விட்டு எங்கே போய் விட்டாள்? இத்தனை குழந்தைகளையும், சீக்காளியான தகப்பனையும் விட்டு விட்டு ஒரு

பல பரீக்ஷைகளில் தேறிவிடுவதாலேயே அறிவு விருத்தியாய்விடுகிறதென்பதற்கில்லை. அனேகருக்கு படிப்பு விருத்தியாக யாக கோண வழிகளில் அதை எப்படி உபயோகிக்கலா மென்பதிலேயே நாட்டமுண்டாகின்றது.

பொம்மனாட்டி இப்படியும் போவது நியாயமா! காலை எட்டு மணிக்குச் சென்றாள். இரவு எட்டு மணி யாயிற்றே. இன்னமும் வராமலிருக்க அவளுக்கு இடம் எங்கே உண்டு? இத்தனை தாயற்ற குழந்தைகளையும், கிழவனான அப்பனையும் எத்தனை நாளைக்குக் கட்டி மாரடிப்பது என்ற எண்ணத்தால் எவனையேனும் இழுத்துக் கொண்டு ஓடி விட்டாளோ!'' என்று சில வம்புக்காரக் குண்டுணிகள் பேசிக்கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

கிழவரோ எழுந்து எழுந்து பார்க்கிறார்; முடியவில்லை. அவர் மனம் துடிப்பதற்களவே இல்லை. அவருடைய ஆபீஸ் நண்பரான கோவிந்தன் என்பவரின் வீட்டிற்குத் தட்டுத் திணறிக் கொண்டு சென்றார். கிழவரின் பரிதாபத்தைக் கண்ட கோவிந்தன் "என்ன கதிர்வேலு! எங்கே வந்தாய்! என்ன உடம்பு? ஏதோ தள்ளாடுகிறாயே!'' என்று கேட்டார்.

கதிர்:—அப்பா! நான் என்ன சொல்வேன்? என் வீட்டின் அலங்கோலந்தான் உனக்குத் தெரியுமே. நம் ஸ்ரீமணி இதோ இந்த விளம்பரத்திலுள்ள வேலையில் அமர எண்ணி அந்த விலாசமுள்ள இடத்திற்குக் காலை 8 மணிக்குச் சென்றாள். இந்நேரம் வரையிலும் எதிர்பார்த்துப் பார்த்து என் கண்ணும் பூத்து விட்டது. என் மனமோ தத்தளிக்கிறது. குழந்தைகளின் கண்ராவியோ கூறத்திறமில்லை. ஸ்ரீமணி ஒருத்தியினாலேயே குழந்தைகள் சாந்தமாக விருக்கின்றன. இன்று அவளைக் காணாமையினால் எல்லாம் அலறுகின்றன. எனக்கு நேற்றிரவு முதல் ஜுரம் கொல்லுகிறது. மணியோ எட்டாய் விட்டது. நான் என்ன செய்வேன்? அந்த விடத்திற்கு யார் போய் எவ்விதம் தேடுவது? அதற்காகவே உன்னிடம் வந்தேன்.

கோவி:—என்ன! என்ன! ஸ்ரீமணியைக் காணவில்லையா! வேலைக்கு விசாரிக்கச் சென்றால் இத்தனை நேரம் ஏன் ஆக வேண்டும்? எங்கேனும் மோட்டார், ட்ராம் முதலிய எமன்களால் விபத்துக்கள் நேர்ந்திருக்குமோ! என்னப்பா! முட்டாள்தனம் செய்து விட்டாயே! குழந்தை என்னதான் சாமார்த்தியமும், தைரியமும்

பொருந்தியவளாக விருப்பினும் அவளைத் தனியே ஏன் அனுப்பி னாய்? அனுப்பிவிட்டு இன்னேரம் தேடாமல் சும்மா இருந்து விட் டாயே! இதென்ன முட்டாள்தனம்! நீ இங்கேயே படுத்திரு. நான் குழந்தைகளை வீட்டிலிருந்து இங்கு கொண்டு வந்து விடுகிறேன். பாலசந்திரனை சென்று அழைத்து வரச் சொல்கிறேன். என்று சொல்லி "பாலு! பாலு!" என்று கூப்பிட்டார். அவருடைய ஏக புத்திரனாகிய பாலு வந்தான். "பாலு! நீ தாதா வீட்டிற்குச் சென்று குழந்தைகளை எல்லாம் அழைத்துக்கொண்டு வந்து அம்மாவிடம் சொல்லி சாப்பாடு போடச் சொல்லு. நானே சென்று இன்று ஏதே னும் விபத்து நடந்திருக்கிறதா என்று பார்த்து வருகிறேன். கதிர் வேலு! நீ இங்கேயே படுத்துக்கொள். நான் வருகிறேன்." என்று கூறிவிட்டு முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விசாரித்தார்.

"இன்று பகல் 11 மணிக்குச் சந்தைத் தெருவில் இரண்டு பஸ்ஸுக்கள் ஒன்றோடொன்று மோதுண்டன. அதனால் மூவருக் குப் படுகாயம் ஏற்பட்டு அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென் றார்கள். அவர்களுக்கு என்ன சிகிச்சைகள் செய்தும் அரை மணிக் குள் இறந்து விட்டார்கள். அவர்களில் இருவர் பெண்களும், ஒரு வர் கிழவரான ஆண் பிள்ளையுமாவர். மூவரில் இருவருக்குத் தகவல் கிடைத்து சவத்தைக் கொண்டுபோய் விட்டார்கள். ஒரு பெண்ணின் சவந்தான் அனாதை என்று தெரிகிறது. அவளைச் சேர்ந்த எந்த தக வலும் தெரியவில்லை. இன்று பத்திரிகையில் விளம்பரப் படுத்தி இருக்கிறோம். நாளைக்குள் தகவல் கிடைக்காவிடின் போலீஸாரே அடக்கம் செய்து விடுவார்கள். இதோ சவத்தின் புகைப்படம் பாருங்கள்; இரண்டு வண்டியும் மோதுண்டு நசுங்குகையில் அந்தப் பெண் அதில் அகப்பட்டுக் கொண்டதால் நசுங்குண்டு வெகு விகா ரப் பட்டுப் போயிருக்கிறது; ரத்த வெள்ளமாகி விட்டது. அதை சுத்தி செய்து இதை எடுத்துள்ளோம்" என்று போலீஸ் அதிகாரி கூறினர்.

இதைக் கேட்ட கோவிந்தனுக்கு தூக்கி வாரிப் போட்டது. "ஐயையோ! என் சிநேகிதருடைய பெண் இன்று காலையில் வெளி யில் சென்றவள் இன்னும் காணவில்லை! அவளைத் தேடிக்கொண்டு

தான் ஐயா நான் வந்தேன். அந்த படத்தைக் காட்டுங்கள்'' என்ருர். உடனே எடுத்த புகைப் படத்தை போலீஸ் இன்ஸ்பெக்டர் காட்டினர்.

ஆகா! அந்த கோராமையைக் கூறத் திறமே இல்லே. முகமும் தலேயும் ஒன்ருக சப்பட்டையாக நசுங்குண்டு மூக்கே துண்டித்துப் போய் முகமே கோணி விட்டது. உடம்பும் அப்படியே நசுங்கிப் போய் உருக் குலேந்து விட்டது. இந்த கண்ராவியை, மகா கோரத்தைக் கண்டு சகிக்கக் கூடாமல் பயந்து விட்டார். கதிகலங்கி விட்டது. "ஐயா! பிணம் எங்கே இருக்கிறது? அதை நேரில் பார்க்கலாமா! ஐயோ! இந்த துக்கத்தை நான் அவளுடைய பிதாவிடத்தில் எவ்விதம் தெரிவிப்பேன்? அவளே டாக்டர் பரிசோதனே செய்தாரா! வயது முதலியன என்ன சொன்ஞர்?'' என்று புலம்பியவாறு கேட்டார்.

போலீஸ்:—ஐயா! டாக்டர் பரிசோதித்தார். அம் மடந்தைக்கு இருபது வயதிற்குள் இருக்க வேண்டு மென்றும், அவளுடைய இருதயம் நொந்து மெலிந்திருப்பதைக் கண்டு அவள் சதா ஏதோ கவலேயோ, துக்கமோ அடைந்திருக்க வேண்டும் என்றும், மூளேயைச் சோதித்ததில் மகா புத்திசாலியாயும், சூக்ஷ்மமாகக் கிரகிக்கும் சக்தியை யுடையவளாகவு மிருந்திருக்க வேண்டு மென்றும் கூறினர்.

இதைக் கேட்ட இவருடைய விசனம் பின்னும் அதிகரித்தது. வெகுவாய்ப் புலம்பியபடியே "ஐயா! தயவு செய்து என்னே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று சவத்தைக் காட்டுங்கள்.'' என்று வேண்டினர். உடனே இவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று சவத்தைக் காட்டினர்கள்.

ஆகா! எவ்வளவு கடின சித்த முடையவர்களாயினும்—பயமற்ற பிராணியா யிருப்பினும்—இந்த பயங்கரமான கோரத்தைக் கண்ட உடனே அபாரமான பயத்தை யடைந்து விடுவார்கள். கண் கொண்டு காணச் சகியாத இந்த சவத்தைக் காண கோவிந்தன் நடுங்

கிருர். மெல்ல ஒருவாறு பார்க்கையில் கூறத்திறமற்றவாறு நசுங்கிப் போய் கிடத்தப்பட் டிருந்தது. கை விரல்கள் தலைமயிர் முதலியவைகளைப் பார்த்தால் ஸ்ரீமணியின் அடையாளம் தெரிவது போலத் தோற்றியது. உயரம், பருமன், சகலமும் அப்படியே ஸ்ரீமணிதான் என்று காட்டின.

கோவிந்தன் இச் சவத்தைக் கண்டு அலறியவாறு, "ஐயா! இவள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த பொழுதே இறந்துவிட்டாளா? ஏதேனும் பேசினளா! ஒன்றும் புரியவில்லையே! இவள் இறக்கும் பொழுது அருகி லிருந்தவர்கள் யார் யார்? தயவு செய்து கூற வேண்டும்" என்ருர்: உடனே லேடி டாக்டர் வந்து "ஐயா! இந்த அம்மாள் இங்கு வந்து அரைமணி நேரம் உயிருடன் இருந்தார்கள். இறக்குந் தறுவாயில் தன்னிரு கைகளையும் கூப்பிக் கடவுளை ஏதோ வேண்டினர்கள்: என் பிதா......திக்கற்ற......ஈசா......என்னை...... என்று ஏதேதோ குழகுழ வென்று நாத்தடுமாறிக் கூறினள். என் கையை நீட்டச் செய்தாள்; ஏதோ ஜாடை செய்தாள்; ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. அடுத்த நிமிடமே கண்ணில் தண்ணீர் வடிந்தது. உயிரும் போய்விட்டது. எங்களுக்குத் தகவலே தெரியவில்லை. அதனால் விளம்பரம் செய்துள்ளோம்" என்ருள்.

இதைக் கேட்டதும் நன்ருக ஊர்ஜிதமாகிவிட்டது. "ஐயோ! நான் எப்படி இந்த கோர சம்பவத்தை அவள் பிதாவிடம் கூறுவேன்? என்னுடைய ஆப்த நண்பரின் மகள் இவள். ஸ்ரீமணீ! ஸ்ரீமணீ! இவ்விதமா உன் கதி யமைந்தது? என்ன செய்வேன்! ஜுரத்துடனும், நீ வராத விசனத்துடனும், தவிக்கையில் உன் சவத்தை நான் அவருக்கு எவ்விதம் காட்டுவேன்! அதோடு அவர் ப்ராணனே போய்விடுமே! உன்னை நம்பி இருந்த எட்டுக் குழந்தைகளையும் நட்டாற்றில் விட்டுவிட்டாயே: ஸ்ரீமணீ!" என்று கதறுகிருர். போலீஸாரும் மற்றையோரும் விசனித்தார்கள். "ஐயா! இப்போது வார்ஸு ஏற்பட்டு விட்டதால் உடனே இவ்விடத்தை விட்டுக் கொண்டு போய்விடும்; இனி இங்கிருக்கலாகாது" என்று கூறிவிட்டார்கள். என்ன செய்வார்! தத்தளித்தபடியே "ஐயா! நான் அவளுடைய பிதாவிடம் விஷயத்தைக் கூறவேண்டாமா!

இதற்குள் அவசரப்படுத்தினால் எப்படி? சற்று பொறுங்கள்'' என்றார்.

அவருடைய மார்பு படபடவென்று அடித்துக் கொள்கிறது. "இனி இதை ஒளிக்க முடியுமா? தலையில் இடி விழுந்துவிட்டதைக் கூறித்தானாகவேண்டும்:'' என்று தீர்மானித்தபடி "ஐயா! நான் இத் துக்ககரமான செய்தியை அவளது பிதாவிடம் தெரிவித்து அழைத்துக்கொண்டு வருகிறேன்.'' என்று கூறிவிட்டுத் தாங்க மாட்டாத விசனத்துடன் புலம்பியவாறு நடக்கலானார்.

பாலு இதற்குள் 8 தாயற்ற குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து தன் தாயாரிடத்திலும் அத்தை யிடத்திலும் விட்டு "அம்மா! இக் குழந்தைகளுக்குச் சாப்பாடு போடும்படி அப்பா சொன்னார்; அழைத்துக் கொண்டு போ'' என்றான்.

இவ்வார்த்தையைக் கேட்டதுமே அவ்விரு தேவதைகளும் கோபப்பொறி பறக்கக் கண்களிரண்டும் மோட்டார்காரின் சிவப்பு விளக்கு போல ஜொலிக்கக் கையை நொறுக்கியவாறு, "ஓங்கப்பன் சொன்னானே இல்லையோ! பின்னெ என்ன குறைவு? ஐயோ! இந்த எழவெடுத்த வீட்டில் இதே பேரந்தானா? விடிந்தால் அஸ்தமித்தால் வடிப்பதும், கொட்டுவதும், உழைப்பதும் இதுதான் என் தலைவிதி யாகிவிட்டதே! வீட்டு புருஷனுக்குப் புத்தி கெட்டுவிட்டால் ஊரா ருக்கு இளைப்பந்தானே! நன்றாக பெருச்சாளி போலத் தின்று கொழுக்கிறார்கள்.

என் சவரணைக்கு வேறு என்ன உண்டு? பக்கத்து வீட்டு பார்வதியைப் பாரு; எத்தனையோ செட்டாகக் குடித்தனம் செய்து பணத்தை மீத்தி கைக்கு வளையல்கள், கழுத்துக்குச் சங்கிலி: எல் லாம் சமுசாரத்திற்கு வந்த மூன்று வருஷங்களுக் குள்ளேயே செய்து போட்டுக்கொண்டு விட்டாள். நானோ இப்பாழும் வீட் டிற்கு வந்து 20 வருஷங்களாகியும் ஒரு காப்புக்கு வழி இல்லை. என் பிழைப்பு இப்படி இருக்கிறது. எப்போ பார்த்தாலும் ஊரார் இழவெடுத்துக் கொண்டிருந்தால் குடும்பம் சீராகிவிடும். அக்கா! நான் கால்படி அரிசிதான் நம் நாலு பேருக்கும் வடித்திருக்கிறேன்;

இத்தனை வயத்தாஞ்சாமிகளுக்கு எப்படி போதும்? அடுப்பை மூட்டுங்கள். ஒன்றரைபடி தவலையை வச்சு வடிச்சுக் கொட்டுங்கள்.'' என்றாள்.

நாத்தனாரும் கூட ஒத்து பாடியவாறு "நீ பிறந்த வேளேடியம்மா! இந்த வீட்டில் நீ புகுந்து சுகப்பட்ட சவரணையடி இது! ஒத்தொத்தர் சாணி தட்டியும், இலை தைத்தும், அப்பளாம் வத்தல் செய்தும், வித்துப் பிழைத்து எத்தனையோ நகைகளும் செய்து கொள்ளுகிறார்கள். கூஜா சீட்டும், 5 ரூபா சீட்டும் கட்டிப் பணமும் சேர்க்கிறார்கள்: மாசம் பிறந்தால் சொளசொளன்னு 100-ரூபாய் சம்பாதிக்கும் இந்த கம்மனாட்டி ஏதாவது ஒரு நகை செய்தானு; போட்டானு! ஒரு பட்டுப் புடவை யுண்டா! வீட்டிலே கெட்டியான சாமான்களுண்டா! கண்ட காலிகளுக்கும் பிண்டங் கொட்டிக் கொட்டி வீட்டை ஒட்டை யாக்கிக் கொண்டு பல்லை இளிக்கிறான்; நூறு ரூபாய் சம்பளக்காரன் பெண்டாட்டிக்கு ஒரு நகை இல்லையே என்று அவனுக்கு மானமிருக்கிறதா! இருந்தா அப்படிச் செய்வானு!'' என்று அடுக்கியவாறு அடுப்பில் உலையை வைத்து விட்டு "ஏண்டி யம்மா! நவக்கிரகங்களில் ஒன்று வக்கிரித்துக் கொண்டு போயிருக்கிறது. இந்த அஷ்ட அவ லக்ஷணங்களும் வீட்டில் பூர்த்தியாக இருக்கின்றன. பிண்ட வேலைக்குள் அதுவும் வந்து சேர்ந்து விடும்; கிழத்துடன் தசாவதாரம் சம்பூர்ணமாய் விடும்—இதுகளுக்கெல்லாம் ஒரு மொடா குழம்பு, ரசமெல்லாம் காய்ச்சித் தொலைக்க வேண்டாமா?'' என்று திருப்பாட்டுப் பாடித் தாண்டவமாடினாள்.

அண்ணி:—வேறு வயிற்றெரிச்சல் என்ன இருக்கிறது? கன்னையா கம்பெனி தசாவதாரத்துக்கு எங்கெங்கிருந்தோ ஜனங்கள் சோற்று மூட்டை கட்டிக் கொண்டு திரள் திரளாக வந்து கண்டானந்தித்தார்களாம். உங்க அழகு அண்ணனேடே அழைத்துக் கொண்டு போகச் சொல்லி நாம்ப மன்றாடினேம். நாடகத்துக் கெல்லாம் பணஞ் செலவழிக்க முடியாதென்றாரே. இப்ப இந்த தசாவதாரத்தையும் வெச்சூண்டு பிண்டங் கொட்டறத்துக்குச் செலவில்லை போலிருக்கு. உம். நம்ம தல்லெழுத்து இது. லோகத்தாரைப் போலே சுகப்பட நாம் பிறக்கவில்லே. இன்னேறு அடுப்பை மூட்டி குழம்பு குண்டானைத் தூக்கித் தொலையுங்கோ— என்று கூறி நாத்திக்கு ஒத்து பாடி நிர்த்தனம் புரிந்தாள்.

வெகு நேரமாகப் பசியினுல் களைத்து வாடிச் சோர்ந்து தவிக்கும் எட்டு குழந்தைகளில் மூத்தவளான ஜயமணியின் காதிலும், தேக பாதையுடன் மனோ வேதனையும் கூடி தவித்துக் கொண்டிருக்கும் கதிர்வேலின் காதிலும், அற்பத்தனமாயும் விபரீதமாயுமுள்ள இவ்வசை மாரிகள் பொழிந்தன. அந்தோ! கிழவரின் மனம் எப்படியிருக்கும்? முன்னை விடப் பதின் மடங்கு அதிகரித்த விசனம் பொங்கித் ததும்புகின்றது. கொஞ்சம் அறிவு பெற்ற ஜயமணிக்கும் அம்பு போல மனத்தில் தாக்குகின்றது. உலகமே அறியாத மற்ற குழந்தைகளுக்கு என்ன தெரியும்? அவைகள் "ஐயோ! 'பசி; பசி!! சாதம் போடு'' என்று அலறுகின்றன.

அவர்கள் பசி யென்று அலறும்போதெல்லாம் உள்ளே யிருக்கும் காளி, பத்திரகாளி ஆகிய இருவரும் உற்சாகத்தோடு பிரசன்னமாகி "இதென்ன பேரிரைச்சல்! சிவனே என்று கிடந்து பிண்டத்தைக் கொட்டும்போது தின்கிறது தானே. உங்க எழவெடுக்கத் தான் உலை வைத்திருக்கிறது. பேசாம லிருங்கள்'' என்று நெஞ்சில் சற்றும் ஈவிரக்க மின்றி கடுமையான சர்ப்பம் போலச் சீறி விழ ஆரம்பித்தார்கள்.

இதுவரையிலும் மிகவும் பொறுமையுடன் கோவிந்தனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கதிர்வேலுக்குக் கூட மேலும் பொறுமையை வகிக்க இயலாது போய்விட்டது. அவர் அனலில் பட்ட மெழுகு போல் தவித்துக் கொண்டிருக்கையில் ஜயமணி அவரிடம் வந்து மெல்லிய குரலால் " அப்பா! இங்கு நடந்த சகல சம்பவங்களையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள் இப்படிப்பட்டவர்க ளிடத்தில் சாப்பிடுவதைவிடப் பட்டினியாகக் கிடந்து சாவது மேலெனத் தோன்றுகின்றது. இந்தக் குழந்தைகள் எவ்வளவு சொல்லியும் கேட்கத் தெரியாமல் கத்துகின்றன. இதனுல் அவர்கள் காட்டும் கொடுமையோ சகிக்க முடியவில்லை. இன்னும் விநாடி மிஞ்சினுல் குழந்தைகளை அடிக்கவும் துணிவார்க ளென்று தோன்றுகின்றது. கோவிந்த மாமா வந்தால் நம்ம வீட்டிற்கு வரட்டும். நாம் போய் விடலாம் வாருங்கள்; ஒருக்கால் ஸ்ரீமணி இதற்குள் வீட்டிற்கு வந்திருக்கிருளோ என்னவோ!'' என்று பணிவாகச் சொன்னுள்.

இதைக் கேட்ட கதிர்வேலு " இந்த சிறிய பெண்ணும் இவ் வருத்தமறிந்து கூறுகின்றுளே!'' என்ற வியப்பும், அடங்காத துக்கமும் அடைந்து கண்ணீர் விட்டார். மறு பேச்சின்றி ஒரு சிறிய காகிதத்தில் ஏதோ எழுதி மேஜைமீது வைத்து விட்டு குசேலர் போல அக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு, ஜுரம் ஒரு பக்கம் தள்ளி யடிக்க, வேதனை ஒருபுறம் வேகத்தோடு தாக்க நடக்க வாரம்பித்தார்.

அவர் சென்ற அரை மணி நேரத்திற் கெல்லாம் கோவிந்தன் 'ஐயோ! நாம் நல்ல சந்தோஷ சமாச்சாரம் கொண்டு வருவோ மென்று ஏங்கி யிருப்பாரே! அவரிடம் நாம் இந்த துக்ககரமான கோர சம்பவத்தை எப்படிச் சொல்வது?'' என்று தவித்தவாறு வீட்டை யடைந்தான். தேகமெல்லாம் நடுக்கலுற்றது. "நண்பா!'' என்று அழைத்துக்கொண்டே உள்ளே சென்றான். முன் கட்டில் கதிர்வேலாவது குழந்தைகளாவது காணுமையால் ஒரு வேளை சாப்பிடுகிறார்களோ வென்று சமையற் கட்டிற்குச் சென்றான். அங்கும் இவ்விரண்டு மூதேவிகளின் தரிசனத்தைத் தவிர வேறொன்றும் காணுததால் "ஏண்டி! குழந்தைக ளெல்லாம் எங்கே சாப்பிட்டார்கள்? கதிர்வேலு எங்கே?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் எதுவும் சரியாக பதில் சொல்லாமல் "பிண்டம் இன்னும் தயாராகவில்லை தசாவதாரத்திற்கு ஒன்று குறைந்ததே, அதுவும் வந்துவிட்டதா? இனி எல்லோருக்கும் கொட்டிவிடலாம்'' என்றார்கள்.

அதைக் கேட்டு திடுக்கிட்ட கோவிந்தன், "என்ன! என்ன! இன்னும் குழந்தைகளுக்குச் சாதம் போடவில்லையா? அவர்களைக் காணவில்லையே! எங்கே சென்றார்கள்?'' என்றான்.

மனைவி:—உங்களுக்கு வாழ்க்கைப்பட்ட சவரணைக்கு அதெல்லாம் துப்பு கண்டுபிடிக்கணமாக்கும். எங்கே தொலையுங்கள்? பிண்டம் கொட்டிக்காமல் எங்கே போகுங்கள்? தெருவில் கோட்டான் போலத் திரிகிறதுகளோ என்னவோ?

இச் சுடுசரங்களைக் கேட்டவுடன் "ஆஹா! ஏதோ மோசம் வந்துவிட்டது. ராக்ஷச குணம் படைத்த பெண் பேய்களா! உங்களுக்குத் தெரியாமல் எங்கே போயிருப்பார்கள்? நீங்கள் என்ன செய்தீர்கள்? சொல்லுங்கள். உம். விதி! விதி!! பேயைப் பெண்டாக அடைந்தால் பதிலுக்குக் காக்க முடியுமா?'' என்று கூறிக்கொண்டே கதிர்வேலின் வீட்டை நோக்கி ஓடினன்.

அங்கு விசாரித்ததில் அவர்கள் இன்னும் வரவில்லையென்று தெரிந்ததும் அபாரமான மனத் தாங்கலை யடைந்த கோவிந்தன் "ஐயோ! கடுமையான ஜுரத்தினல் பீடிக்கப் படும் கதிர்வேலு பசியினல் வாடும் எட்டு குழந்தைகளுடன் எங்கு சென்றிருப்பான்? அட கஷ்ட காலமே! அந்த அடங்காப் பிடாரிகளால் என்ன என்ன விபத்து நேர்ந்து விட்டதோ? இப்போது அவர்களை எங்கு தேடுவேன்? பிணத்திற்காக அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன்?'' என்று இடி விழுந்தவன்போலக் கதிகலங்கி நின்று விட்டான்.

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல

எங்கள் பிரசித்தி பெற்ற
"மெடல்" மார்க்கு
பட்டுச் சேலைகளைப் பார்த்து

இதர நெசவுக்காரர்களும், பாக்டரிகளும் விதேசப் பட்டு நூலைக் கொண்டு தயாரித்த சேலைகளை மார்க்கட்டில் விற்பனை செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

ஆகையால்

நீங்கள் வாங்கும் பட்டுச் சேலைகளில் எங்கள்
"மெடல் மார்க்" டிக்கட் இருக்கிறதா என்பதைக்
கவனித்து வாங்குங்கள்.

இந்த டிக்கட்டுதான்
உங்களையும், உங்கள் வியாபாரிகளையும்
ஏமாறச் செய்யாமல் இருப்பது

கெய்ஸர் — இ — ஹிண்ட் உல்லன்,
காட்டன் & ஸில்க் மில்ஸ் லிமிடெட்,
பெங்களூர்.

சென்னை ராஜதானி ஸோல் ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்

டி. ஆர். என். சாமி,

2-74, கிடங்குத் தெரு, : மதராஸ்.

பாரதியார் நூல்கள்

கதைக் கொத்து

இதில் பாரதியார் தன் சொந்த அநுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள், இன்னும் நமது மடமை, மூட பக்தி, ஸ்திரீகளின் நிலைமை இவை போன்ற ஸமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையை எடுத்துரைக்கிறார். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. அணா 0 8 0

பகவத் கீதை

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான முன்முகமும் அடங்கியது. அணா 0 8 0

வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோக ஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளன. ரூபா. 2 0 0

கவிதைகள்

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திச்சூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தன. ரூபா 2 8 0

சங்கு நூல்கள்

மகாத்மா காந்தி எழுதிய

	ரூ.	அ
சத்திய சோதனை I	1	8
ஷை II	2	0
இல்லறமும் பிரம்மசரியமும்	0	6
அனாசக்தியோகம்	0	4
ஆரோக்கிய வழி	0	4
நீதி தருமம்	0	2
கீதாபோதனை	0	2
உத்தம வாழ்க்கை	0	2
ஹிந்து தாமம்	0	2

ரோமேன் ரோலண்டு எழுதிய

	ரூ.	அ
மகாத்மா காந்தி (புதிய பதிப்பு	0	4

வில்லியம் தர்ஸ்டன் எழுதிய

	ரூ.	அ
இல்லற மகா ரகசியம்	0	4

பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான

இந்தியாவின் கடன் பொறுப்பு	0	4

க. சந்தானம் எழுதிய

சத்திய சமாஜம்	0	4

வ. வே. ஸு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின் காதல் கதைகள்	0	8

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி சென்னை.

ஒரு அரிய சந்தர்ப்பம் !

இனி ஸ்திரீகளும்

இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியுமென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரேக்டர்.

பதினேன்றுவதாண்டு! பிறந்துவிட்டது!!

வருட சந்தா ரூ. 1 8 0 தனிப்பிரதி அணா. 2.

"ஜகன்மோகினி"

இவ்வாண்டில் ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய தியாகக்கோடி எனும் அற்புதமான துப்பறியும் நாவல் அனேக அனுபவ நீதி சாரங்களுடன் வெளிவருகின்றது. இக்கதை முடிந்ததும், மற்றொரு நாவல் வெளிவரும். வருஷம் முடிந்ததும், இவ்விரண்டு நாவல்களும் ரூ. 3-க்கு விற்கப்படுமாதலால் இப்பொழுதே சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்த விலையில் நிறைந்த பக்கங்களையுடைய சிறந்த நாவல்களை யடைவதுடன் மேற்படி நூலாசிரியை எழுதிய இதர நாவல்களையும் மறு பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ளலா மென்பதைக் கவனிக்கவும். மேலும் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

ஜீவிய சந்தா ரூ. 25. ஜீவிய சந்தாநேயர்களுக்கு இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அனுப்பப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

"ஜெகன்மோகினி" ஆசிரியை

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
பாடிய பாடல்களை

நீங்கள் இன்னும் கேட்கவில்லையா?

இன்றே கேட்டு ஆனந்தியுங்கள்.

GE 197	ஏழைமுகம் பாரய்யா - ஹிந்து பைரவி போகுது பார் பணம் - நட பைரவி	விலை ரூ. 2-12-0
GE 205	சொல்லுவம் வைஷ்ணவன் - பியாக் சத்யாக்ரகத்தியாகி - மாண்ட்	விலை ரூ. 2-12-0
GE 222	வெட்கமில்லையோ மனத்தில் - பியாக் தாயே தந்தை யென்றும் - ராகமாலிகை	விலை ரூ. 2-12-0
GE 236	ஸந்தேகமு யாலரா 1. - கல்யாணி " 2. - "	விலை ரூ. 2-12-0

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் ...

ஆர்வ்ஸ் கொலம்பியா ஹவுஸ்,
மதருஸ்,

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

PRINTED BY V. M. PARTHASARATHY AT TATA PRESS, MADRAS.

மூன்று மாதங்களில் கொடுக்கலாம்

நமது புது சந்தா நேயர்களில் பலர் நமது நூலாசிரியை எழுதிய எல்லா (21) நாவல்களையும் வாங்கிப் படிக்க ஆவலாயிருக்கிறதென்றும், ஆனால் ஒரே மொத்தமாகப் பணத்தைக் கொடுக்கக் கஷ்டமாயிருக்கிறதென்றும் சொல்வதால், அவர்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்யக் கருதி கீழ்க்கண்ட ஏற்பாடு செய்துள்ளோம்.

முதலில் ரூ. 12 முன் பணமனுப்பினால் 21 புத்தகங்களையும் அனுப்பிவிடுகிறோம். மீதியுள்ள பத்து ரூபாயை மாதம் ரூ. 5 வீதம் இரண்டு மாதங்களில் அனுப்பலாம்.

வேண்டியவர்கள் உடனே முன் பணமனுப்புங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

			"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை	
	ரூ.	அ.	ரூ.	அ.
வைதேகி (2-பாகங்கள்)	2	8	... 2	0
பத்மசுந்தரன்	2	8	... 2	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	... 2	0
சாருலோசனை (2 பாகங்கள்)	2	8	... 2	0
காதலின் கனி	2	8	... 2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	... 1	12
ருக்மிணிகாந்தன்	2	0	... 1	12
சாமளநாதன்	2	0	... 1	12
சண்பக விஜயம்	1	12	... 1	8
கௌரீமுகுந்தன்	1	12	... 1	8
ஸாரமதி	1	12	... 1	8
சோதனையின் கொடுமை	1	8	... 1	4
பரிமளகேசவன்	1	4	... 1	0
உத்தமசீலன்	1	4	... 1	0
சுகந்தபுஷ்பம்	1	0	... 0	14
கதம்பமாலை	1	0	... 0	14
கோபாலரத்னம்	0	14	... 0	12
நளினசேகரன்	0	8	... 0	6
வீரவஸந்தா	0	8	... 0	6
மூன்று வைரங்கள்	0	8	... 0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	... 0	6

Jaganmohini (Jan. 1934)   Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.

மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக்கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

ஏஜண்டு:
ஏ. பி. பாரெக்கு,
சைனா பஜார் ரோட்,
சென்னை.

அமிர்தாஞ்சன்
டிபோ.,
சென்[illegible] கல்கத்தா
[illegible]ம்பாய்